Lifeline
மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 49 Pages 4 Sunday, 25 January 2009 Free Copy

இருப்பிடம் தேடும் இடம்பெயர் மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது மூன்று இலட்சம் பேரளவில் வாழ்ந்து வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 15000 குடும்பங்கள் பரமந்தனாறு, புன்னை நீராவி, கண்ணகி நகர் ஆகிய பிரதேசங்களில் வாழ்வதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவை நோக்கி இடம்பெயரும் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில், சுதந்திரபுரம், வள்ளிமுனை, ரெட்பானா ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். 9ஆவது வாகன உணவுத் தொடரணியானது இவ்வாரம் சென்றுள்ளது. அதேவேளை எதிர்வரும் காலங்களில் இத்தொடரணியானது முல் லைத்தீவை நோக்கி அதிகம் செல்லும் எனவும் வன்னியிலுள்ள அரச அதிகாரிகளின் பாதுகாப்பு பற்றி அதிக கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் எமல்டா சுகுமார் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் மக்கள் செறிவாக வாழ்கின்றனர். அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகஸ்தர்கள், வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு பாதுகாப்பினை ஏற்பாடு செய்து தருமாறு கோரியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் வன்னியில் கடமையில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களின் பாதுகாப்புத் தொடர்பில் அரசு உரிய கவனம் எடுத்தல் அவசியம் என வன்னியிலுள்ள வைத்தியர்களினால் அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலிருந்து இடம்பெயர்ந்து செல்லும் மக்கள்

பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு அவர்களது பாதுகாப்பு விடயம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. வன்னி ஒரு யுத்த பிரதேசமாக இருக்கின்ற காரணத்தினால், இன்றைய சூழலில் பொருட்களை எடுத்துச் செல்வதில் கஷ்டங்கள் நிலவுகின்றன. என்றாலும் முடிந்தவரை வைத்தியர்கள் தமது பணியை செய்துவருகின்றார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாரம் 800 நபர்கள் வன்னியிலிருந்து வவுனியாவிற்கு வருகை தந்துள்ளனர். மெனிக்பாம் மற்றும் நெலுக்குளம் முகாம்களில் இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இம்மாதம் 16ஆம் திகதிவரை அண்ணளவாக 2200 பேர் வவுனியாவிற்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. எதிர்வரும் வாரங்களில் இத்தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை அண்மையில் வவுனியாவிற்கு அமைச்சர் ரிஷாட்பதியுதீன் விஜயம் மேற்கொண்டிருந்தபோது வன்னியிலுள்ள மக்களை பாதுகாப்பாக வெளியே கொண்டு வருதல் தொடர்பில் நோர்வே தூதரகத்தின் உதவி நாடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் தரகராக இருந்த நோர்வே தூதுவரோடு பசில் ராஜபக்ஷ அவர்கள் கலந்துரையாடியுள்ளர். மக்களைக் காப்பாற்றுவதுதான் முக்கியமாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் வருவதற்குத் தேவையான பாதையையும் வசதியையும் செய்துகொடுக்க நோர்வே போன்ற *(3ஆம் பக்கம் பார்க்க)*

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநுராதபுரம் எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.internews.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 159ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 17,258 குடும்பங்களைச் சேர்ந்த 58,162 பேர் (வன்னி நீங்கலாக) அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ வடமராட்சி கிழக்கு மற்றும் பளை பிரதேசச் செயலகத்திற்கு உட்பட்ட பிரிவுகளிலிருந்து இதுவரை யாழ்ப்பாணத்திற்கு இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மிருசுவிலிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயம் மற்றும் அதனுடன் இணைந்துள்ள பாடசாலைக் கட்டிடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பிரதேச செயலர் சீனிவாசன் தெரிவித்தார்.

✱ வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு வந்துள்ள பொதுமக்களின் தேவைகள் குறித்து ஆராய்வதற்காக கடந்த 14ஆம் திகதியன்று மீள்குடியேற்ற அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வடமாகாணத்திற்கான ஆளுநர் மற்றும் வவுனியா மாவட்ட உயர் அதிகாரிகள் வவுனியா மெனிக்பாம் மற்றும் நெலுக்குளம் முகாம்களுக்குச் சென்று வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக ஆய்வுகளை நடத்தியிருந்தார்கள்.

✱ மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளும் ஒரு மருத்துவமனையும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. சர்வதேச ஐக்கியத்திற்கான ஐக்கிய அமெரிக்க உதவித் திட்டம் ஐக்கிய அமெரிக்க பசுபிக் கொமாண்ட் என்பவற்றின் ஊடாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் மேற்பார்வையில் இவை புனரமைப்பு செய்யப்படுகின்றன.

✱ மூதூர் பிரதேச செயலகப் பிரிவின் கட்டைபறிச்சான் வடக்கு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட சாலையூர் கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்கள் திங்கட்கிழமை 19ஆம் திகதி தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட செயலகப் புனர்வாழ்வு மீள்குடியேற்றத் திட்ட பிரதிப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஷெரீப் தெரிவித்துள்ளார்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

த.பெ.இல. 1039 கொழும்பு

தொ.பே: 0774952242

மின்னஞ்சல்:info@lifelinesrilanka.com

பேசும் படம்



திருகோணமலை கலாசார மண்டபத்திலிருந்து கிளிவெட்டி முகாமிற்கு இடம் மாற்றப்பட்டுள்ள பெண் ஒருவர் சமையலில் ஈடுபட்டிருப்பதையே படத்தில் காண்கின்றீர்கள். சுமார் இருபதிற்கும் அதிகமான உள்ளக இடம்பெயர்வுகளுக்கு உள்ளான மூதூர் பகுதியைச் சேர்ந்த மக்கள், அண்மையில் மீண்டும் கிளிவெட்டி முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புகளின் ஓர் அங்கமாகும்.

வவுனியா நோக்கி ஒரு ரயில் பயணம்

கொழும்பிற்கும் வவுனியாவுக்குமான யாழ்தேவி புகையிரதச் சேவை மதவாச்சியுடன் மட்டுப்படுத்தப்பட்டு 10 மாதங்கள் முடிந்த நிலையில் மீண்டும் கடந்த மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிய வவுனியா மக்களுக்கு மீண்டும் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டமை ஆறுதல் தரும் விடயமாகும். இது குறித்து மக்களது கருத்தைத் தெரிந்துகொள்வதற்காக ரயிலில் பயணம் செய்த ஆர்த்தி பாக்கியநாதன் அவரது அனுபவங்களை பகிர்ந்துகொள்கிறார்.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணி. சில்லென்று வீசிய குளிர்காற்றைக் கிழித்துக்கொண்டு வடக்கு நோக்கி புறப்பட்டது யாழ்தேவி புகையிரதம். அதிகாலை இருளையும் குளிரையும் மறந்து சுகமான பயணத்தில் லயித்துக்கொண்டிருந்தனர் பயணிகள்.

பாதுகாப்பு காரணங்களுக்காக 10 மாதங்களுக்கு முன்னர் அரசினால் நிறுத்தப்பட்ட வவுனியா புகையிரதம் மீண்டும் வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்தது. பயணிகளது உணர்வுகளை அறிந்துகொள்ளும் நோக்கில் நானும் அன்று அந்த ரயிலில் பயணித்தேன்.

சில்லென்று வீசிய தூய்மையான காற்று ஒவ்வொருவரையும் மென்மையாக வருடிச்சென்றது. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி யாழ்தேவியில் பயணம் செய்த அனைவரது முகங்களிலும் ஒரு பரவசம். பச்சைப் பசேலென்று காடுகள், தலை சாய்த்து பணிவுடன் அசைந்தாடும் வயல்வெளிகளுக்கு மத்தியில் நீண்டநெடும் பாம்பொன்று ஊர்ந்து செல்வதைப்போன்று அசைந்து, அசைந்து சென்று கொண்டிருந்தது யாழ்தேவி.

இடையிடையே நிறுத்தப்பட்ட பிரதான புகையிரத நிலையங்களிலிருந்து பல பயணிகள் குழந்தைகளுடனும் பொதிகளுடனும் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். அதனிடையே வந்து சென்ற வியாபாரிகள் உணவுப் பொருட்களை விற்பதிலேயே நோக்காக இருந்தனர்.

எனது இருக்கைக்கு அருகிலிருந்த பெண் என்னை நோக்கி மென்மையாக புன்னகைத்தார். கையில் சுமார் 3 வயது பெண் குழந்தை. நெற்றியில் வைத்திருந்த பொட்டு அவர் தமிழர் என்பதை அடையாளப்படுத்தியது.

'கொழும்புக்கு போய் வருகிறீர்களா?' நான் கேட்டேன்.

'ஆம்'. அளவோடு பேசினார்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் உறவுப்பாலமாய் விளங்கும் யாழ்தேவி பத்து மாதங்களின் பின்னர் மீண்டும் தனது உறவுகளைத்தேடி ஓடுகிறது...

'அடிக்கடி போய் வருவீர்களா?' என்றேன்.

'இல்லை தேவையிருந்தால் செல்வேன்.' என்றார்.

'10மாதங்களுக்கு பின்னர் வவுனியாவிற்கான புகையிரத போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?' என்று கேட்டபோது 'கடந்த பல மாதங்களாக புகையிரத போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்ததனால் நாங்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. இருப்பினும் ஒரு தடவை மட் டுமே ரயில் வந்து போவதால் முழுமையான தீர்வு கிடைத்தது என்று கூற முடியாதுள்ளது. முன்னர் தினமும் 5புகையிரத சேவைகள் இடம் பெற்றன. தற்போது ஒரு முறை மட்டுமே போக்குவரத்து இடம்பெறுவதனால் பெரிதான மாற்றம் எதுவும் இல்லை' என்றார்.

வவுனியாவில் வாகனம் திருத்தும் நிலையம் வைத்திருக்கும் ஒருவரையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தேவையான வாகன உதிரிப்பாகங்களை கொழும்பிற்குச் சென்று பெற்றுக்கொள்ளும் அவர், கடந்த 10 மாதங்களில் ஒரு தடவைகூட கொழும்பிற்கு செல்லவில்லையென்றும் இதனால் தனது தொழிலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது என்றும் கூறினார்.

சுமார் 7 மணித்தியால பயணத்தின் பின்னர் நண்பகல் 12.10 மணியளவில் மதவாச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்தது யாழ்தேவி. அங்கு துப்பாக்கிகளுடன் ஏறிய காவல் துறையினர் புகையிரதம் முழுவதையும் சோதனை செய்தனர். சுமார் 20நிமிடங்களில் சோதனை முடிவடைய மீண்டும் பயணத் தைத் தொடர்ந்தது யாழ்தேவி.

புகையிரத போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்த காலப் பகுதியில் மதவாச்சியைக் கடந்து செல்ல சுமார் 2 மணித்தியாளங்கள் தேவைப்பட்டன. பயணிகள், பொருட்கள், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் செல்லும் வாகனங்கள் என அனைத்துமே சோதனைக்குட்படுத்தப்பட்டன. அந்த நிலைமை தற்போது குறைவடைந்துள்ளது.

யாழ்தேவி புகையிரதம் நண்பகல் 12.50 மணி அளவில் வவுனியா புகையிரத நிலையத்தைச் சென்றடைந்தது. மக்களது துயரை ஓரளவுக்காவது குறைத்தோமே என்ற மகிழ்ச்சியில் மீண்டும் கொழும்பு நோக்கிப் பயணமானது யாழ்தேவி.

சாரம்

மூதூர்கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் தற்போது அரச நிறுவனங்களின் பணிப்புரையின் கீழ் கிளிவெட்டி முகாமுக்கு இடம் மாற்றப்பட்டு வருகின்றனர். கடந்த 8ஆம் திகதி இவ்வாறு இடம்மாற்றப்பட்ட சிலரை கிளிவெட்டி முகாமில் சந்தித்த போது தாம் இடம் மாற்றப்பட்டமை தொடர்பான கருத்துக்களை தெரிவித்தனர்.

நபர் 1: கடற்கரைச்சேனையிலிருந்து இடம்பெயர்ந்து திருகோணமலை கலாசார மண்டபத்திற்கு சென்றோம். அங்கும் எமக்கு கஷ்டமாகத்தான் இருந்தது. பின்னர் நிறுவனங்கள் வந்து எமக்கு உதவி செய்தன. கொஞ்சம் பிரச்சனையில்லாமல் இருந்தோம். திரும்பவும் எம்மை கிளிவெட்டி முகாமிற்கு கொண்டு வந்துள்ளார்கள். இங்கு கொட்டில் இல்லை. பிள்ளைகளை வைத்திருக்க முடியவில்லை. தண்ணீருக்கு கஷ்டமாக உள்ளது. நுளம்பு அதிகமாகவுள்ளது. குளிராகவும் உள்ளது. மழை நேரங்களில் தண்ணீர் உள்ளே வருகின்றது. மலசல கூடங்கள் நிரம்பி வழிகின்றன. இங்கிருந்தால் எமக்கு நோய்கள்தான் வரும். எங்கள் கொட்டிலுக்குள் மூன்று குடும்பங்கள் இருக்கின்றனர். மொத்தமாக 12 பேர் இருக்கின்றோம்.

நபர் 2: நாங்கள் அங்கிருக்கும்போது கைத்தொழில்கள் செய்து வந்தோம். கலாசார மண்டபத்தை மூடப்போகின்றோம், உங்களுக்கு கிளிவெட்டியில் கொட்டில் அமைத்திருக்கின்றார்கள், அங்கு செல்லுங்கள் என்று எம்மை அனுப்பி வைத்தார்கள். நாங்கள் இங்கு வந்ததும் கிராம சேவகர் தனக்கு நேற்று முன்தினம் தான் தகவல் கிடைத்ததாகத் தெரிவித்தார். அதன் பின்னர் அவர்கள் எங்களுக்கு சமைத்த உணவு கொடுத்தார்கள். எங்களுக்குத் தங்குவதற்கு கொட்டில் கூட இல்லை. வளவுகளில் தான் உறங்குகின்றோம்.

நபர் 3: நாங்கள் சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து பாட்டாளிபுரம், வம்மிவட்டுவான், பால்சேனை மற்றும் வாகரை போன்ற இடங்களில் தங்கியிருந்தோம். பின்னர் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் தங்கியிருந்தோம். எமது பிள்ளைகள் அங்கிருந்து தான் படித்தார்கள். எங்களை இங்கு மாற்றும்போது பிள்ளைகளின் படிப்பு பாழாகிறது எங்களுக்கு வெளியில் கொட்டில் அமைத்துத் தாருங்கள், நாங்கள் இங்கேயே இருக்கின்றோம் என்று தெரிவித்தோம். தற்போது இங்கு அவர்கள் எந்தவித ஒழுங்கும் செய்துதரவில்லை.

என்று தீரும் இந்த ஏக்கங்கள்?

பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகளால் வன்னியிலுள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்கின்றவர்களில் அதிகமானோர் முல்லைத்தீவு பகுதியை நோக்கியும் சிலர் வவுனியாவை நோக்கியும் இடம்பெயர்ந்து வருகின்றனர். ஆரம்பத்தில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த 17 குடும்பங்கள் வவுனியா சிதம்பரபுரம் முகாமில் தஞ்சமடைந்துள்ளனர். சிதம்பரபுரம் முகாமுக்கு நாம் சென்றிருந்தபோது அங்கு ஓலையினாலான சிறிய வீடொன்றின் முன் புறத்தில் சில ஆண்களும் பெண்களும் மிகவும் சோகம் நிறைந்த முகங்களுடன் அமர்ந்திருந்தனர். அங்கிருந்த ஒருவரிடம் சென்று வினவியபோது இரண்டு மாதங்களுக்கு முன்னர் வன்னியிலிருந்து திருகோணமலைக்கு படகு மூலமாக மூன்று குடும்பங்கள் குச்சவெளி பகுதியை வந்தடைந்ததாகவும் அதன் பிறகு பாதுகாப்பு படையினரால் வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

உண்மையில் இவர்கள் திருகோணமலையிலுள்ள தமது உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று மீன்பிடித்தொழில் செய்து வாழ்க்கையை கொண்டு செல்லலாம் என்ற நம்பிக்கையிலேயே இடம்பெயர்ந்திருக்கின்றனர். ஆனால் விதி இவர்களை வவுனியாவிற்கு கொண்டுவந்துவிட்டது. தற்போது இவர்கள் திருகோணமலைக்கு செல்வதற்கு வவுனியா கச்சேரியின் அனுமதிக்காக காத்திருக்கின்றனர். சொந்த இடத்தில் மீன்பிடித்தொழில் செய்ததாகவும் வவுனியாவில் அத்தொழிலை செய்ய முடியாதெனவும் அதைத்தவிர வேறு தொழில்கள் தமக்கு தெரியாதெனவும் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர் தங்களுடைய நிலைமையை மேலும் எடுத்துக் கூறினார்.

இரண்டரை வயது குழந்தையுடன் நின்று கொண்டிருந்த அவரின் மனைவியும் தன்னுடைய கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார். அம்முகாமில் தாம் சந்தோசமாக உள்ளபோதும் தொழில் இன்றி வெறுமனே வீட்டில் தங்கியிருப்பதால் வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்கு மிகவும் சிரமமாக இருப்பதாகவும், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதுடன் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக இடம்பெயர்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா சிதம்பரபுரம் முகாமில் வசிக்கும் மக்கள்

இவர்கள் தமது தங்க நகைகளை அம்முகாமில் உள்ள சிறிய கடைகளில் ஈடு வைத்து வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர். முகாமில் சிறிய கடை ஒன்றை நடத்தி வரும் ஜெகதீசும் இவர்களுக்கு கடனுதவிகளை செய்துள்ளார். இடம்பெயர்ந்து வந்தவர்கள் யாரென்று கூட தனக்குத் தெரியாவிட்டாலும் அவர்கள் அகதிகள் என்பதால் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருவதாகவும், தானும் இடம்பெயர்ந்தவர் என்பதால் அவர்களுடைய சூழ்நிலையை தன்னால் புரிந்துகொள்ள முடியும் எனவும் ஜெகதீஸ் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வன்னியிலிருந்து வவுனியாவை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றவர்கள் மெனிக்பாம், நெலுக்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள முகாம்களிலும் சிதம்பரபுரத்திலும் தங்கியிருக்கின்றனர். இருப்பினும் இவர்கள் ஒருவரை மற்றவர் சந்திக்கக் கூடிய வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. தனது ஊர் மக்களை வவுனியாவில் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்று தெரியாதெனவும் தன்னுடைய உறவினர்கள் வவுனியாவிற்கு இடம்பெயர்ந்திருக்கின்றார்களா என்று தெரியாததால் அதற்காக தான் முயற்சி செய்யவில்லை எனவும் சண்முகம் என்பவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் சிதம்பரபுரம் முகாமில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த 19 குடும்பங்கள் வசித்தபோதும் அரசாங்க அதிபரின் அனுமதியைப்பெற்று இரண்டு குடும்பங்கள் வவுனியா நகரில் வாழ்ந்து வருவதாக தெரி விக்கப்படுகின்றது. பாதுகாப்புடன் கூடிய சந்தோசமான வாழ்க்கை, உறவுகளின் அரவணைப்பு என பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் இடம்பெயர்கின்ற மக்களின் வாழ்க்கையில் அவர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஒருங்கே பூர்த்தியடைவதில்லை. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு ஏக்கத்துடன் அவர்கள் வாழவேண்டிய நிலையே காணப்படுகிறது. இவர்களின் ஏக்கங்கள் நீங்கி எதிர்பார்ப்புகள் ஈடேற வேண்டும் என்பதே நம் அனைவரினதும் விருப்பாகும்.

பாதுகாப்புடன் கூடிய சந்தோசமான வாழ்க்கை, உறவுகளின் அரவணைப்பு என பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் இடம்பெயர்கின்ற மக்களின் வாழ்க்கையில் அவர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஒருங்கே பூர்த்தியடைவதில்லை

இருப்பிடம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடும் ஐ.சி.ஆர்.சி போன்ற தொண்டு நிறுவனங்களும் உதவ வேண்டுமென்று அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது என அமைச்சர் மேலும் கருத்துரைத்தார்.

கடந்தவாரம் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த 93 குடும்பங்களுக்கு தற்காலிக இருப்பிடங்களாக தனித்தனி வீடுகள் வவுனியாவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அவர்களுக்கான தேவைகள் அதிகரித்த வண்ணம் இருப்பதாகவும் வவுனியா அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்தார்.

தனக்கு விடுக்கப்பட்டுள்ள பணிப்புரையின் கீழ் இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் அருகாமையிலுள்ள பாடசாலைகளில் கல்விக்காக உள்வாங்கப்படுவார்கள் எனவும் அத்துடன் ஆசிரியர்களுக்கு இடமாற்றத்தை அளித்து அவர்கள் இடம்பெயர்ந்த மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளில் கடமையில் அமர்த்தப்படுவார்கள் எனவும் வவுனியா அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் அதிக மக்கள் வவுனியாவை நோக்கி இடம்பெயர்வர் என்றும் அரசாங்கம் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் இவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றத் தயாராக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

வாழ்வின் வர்ணங்கள்

'சீதனச் சந்தையில் சீரழியும் மனிதம்' என்ற தலைப்பிலான ஆக்கமொன்று கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி எமது பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. திருகோணமலை ஜமாலியா வீதியில் வாழும் பல பெண்கள் சீதனத்திற்காக வெளிநாடு செல்வதாகவும் திருமணம் செய்ய இயலாமல் இருப்பதாகவும் அந்த ஆக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அங்கு அவ்வாறான பிரச்சினை எவையும் இல்லையென ஜமாலியா மொஹிடீன் பள்ளிவாசலினூடாக அறியத்தரப்பட்டுள்ளது. இத்தகவலுக்கு மறுப்புத் தெரிவித்து ஜனசபா பிரிவுத் தலைவரும் ஜமாலியா சன சமூகத்தின் செயலாளருமான அப்துல் மஜீத் பசீர் தெரிவித்த கருத்துக்களை இங்கே தருகிறோம்.

அப்துல் மஜீத் பசீர்

'எமது ஊரில் சீதனப் பிரச்சினை இருக்கின்றது என்று பத்திரிகையில் வெளியிடப்பட்ட கருத்து முற்று முழுதான பொய். ஹட்ச் முகமது ரம்ஷான் பீவி குறிப்பிட்ட கருத்து முற்றிலும் தவறானது. எமது ஊரில் சீதனம் கேட்டு பெண்களை விட்டுச் சென்றவர் எவரும் இல்லை. எனக்கு 49 வயதாகிறது. இத்தனை காலத்திற்கும் அவ்வாறான தகவலை நான் அறிந்ததில்லை. நீங்கள் இதனை பலரும் பார்ப்பதுபோல் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப வேண்டும். மற்றவர்களிடம் இது குறித்து கருத்துக் கேட்டு மறுப்பு அறிவித்தல் ஒன்று வெளியிட வேண்டும்.'

"இடம்பெயர்ந்துவர்களை விடுவிப்பதாயின் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டும்"

-யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணேஷ்

வன்னியில் இடம்பெற்றுவரும் படை நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களில் சிலர் யாழ்குடா நாட்டை சென்றடைந்துள்ளனர். சுமார் 1200பேர் இதுவரை யாழ்குடாவிற்கு வருகை தந்துள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணேஷ் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தின் மூன்று நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொண்டு வருவதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலதிகத் தகவல்களைப்பெற அவரை நேர்கண்டுள்ளோம்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணேஷ்

இடம்பெயர் மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகள் எவை? அவர்கள் எங்கெங்கு தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்?

புதிதாக இராணுவத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து மக்கள் வந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கென மூன்று நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும் பழைய பூங்கா வீதியிலுள்ள பழைய நீதிமன்றக் கட்டடத்திலும் மிருசுவில் பாடசாலை மற்றும் அதை அண்டியுள்ள தேவாலயத்திலும் அவை அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது வருகின்ற மக்கள் மிருசுவில் தேவாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இதுவரை 1200க்கும் அதிகமானவர்கள் வந்துள்ளார்கள்.

அவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உணவு, நீர் விநியோகம், மலசலகூட வசதிகள் செய்துகொடுக் கப்பட்டுள்ளன. இருப்பினும் அவர்களுக்குரிய மல சலகூட வசதிகளை அதிகரித்துக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குரிய கட்டுமானப்பணிகளை நாளையிலிருந்து ஆரம்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். மேலதிகமாக மக்கள் வருகை தருவார்களாயின் அருகிலுள்ள கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கவைப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்துள்ளோம். அதுமட்டுமன்றி யாழ் மாவட்டத்தில் இயங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் UNHCR, IOM போன்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அதற்கு மேலதிகமாக உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் தங்களால் இயன்ற பணிகளை முன்னெடுத்து வருகின்றன. மக்களுடைய தேவைகளை திருப்திகரமாக நிறைவேற்றுவதற்குரிய சகல ஏற்பாடுகளையும் நாங்கள் செய்துள்ளோம்.

நிறுவனங்களிடம் இருந்து உதவி கோருவதற்காக மாநாடொன்றைத் தாங்கள் ஏற்பாடு செய்துள்ளதாக அறிகிறோம். இது குறித்து தாங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

நாங்கள் ஏற்கனவே சில நிறுவனங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுள்ளோம். இருப்பினும் நேரடியாக சந்திப்பது கருத்துப்பரிமாற்றத்திற்கு இலகுவாக இருக்கும்.

சம்மந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், அரச திணைக்களங்கள் ஊடாக கல்வி, சுகாதாரம், நீர் விநியோகம் போன்ற விடயங்களைக் கலந்துரையாடுவதற்காகவும் உணவற்ற நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் உரிய ஏற்பாடுகளை நாங்கள் செய்வதற்காக இந்த கூட்டத்தினை ஒழுங்கு செய்துள்ளோம்.

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி செயற்பாடுகளைத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் குறித்து கூற முடியுமா?

கோப்பாயில் 38 மாணவர்களை இனங்கண்டு அவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுத் துள்ளோம். மிருசுவிலிலுள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பதற்குரிய ஏற்பாடுகளையும் நோயாளர்களுக்குரிய வைத்திய ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கவுள்ளோம். வைத்தியத்திற்கென தனியாக கட்டடம் ஒன்றை ஒதுக்கிக் கொடுத்துள்ளோம். அங்கு வைத்தியர்களும் வருகை தருகின்றனர்.

இடம்பெயர்ந்து வருபவர்களின் உறவினர்கள் யாழ்குடாநாட்டில் இருக்கும்பட்சத்தில் அவர்கள் அங்கு சென்று குடியேறுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றதா?

உறவினர்கள் எங்கு அதிகமாக இருக்கின்றார்களோ அந்த இடங்களுக்குத்தான் முதலில் மக்கள் இடம்பெயர்ந்து செல்ல விரும்புவார்கள் என நான் நினைக்கின்றேன். அவர்களை விடுவிப்பதாயின் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

யாழ்குடா நாட்டிற்கு இடம்பெயர்பவர்களைக் கவனிப்பதற்கென விஷேட நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

அரசாங்கத்திடம் இதற்கென நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கோரியுள்ளேன். இதுகுறித்து சமூக சேவை அமைச்சரினால் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு சூழல் பராமரிப்பின் அவசியம் குறித்து எடுத்துக்கூறும் வகையில் 'சூழல் பாதுகாப்பு' குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

சூழல் பாதுகாப்பு

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதியில் வாராவாரம் புதிய விடயங்களை நாடக வடிவில் தொகுத்து வழங்குகின்றோம். இயந்திர யுகமான இந்த உலகில் மனிதனது செயற்பாடுகளால் அவனைச் சுற்றியுள்ள சூழலுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களுக்கு சூழல் மாசுபடுவதும் முக்கியமான காரணமாக அமைகின்றது.

சூழல் மாசுபடுவதும் அதற்கான காரணங்களும் பற்றிக் கூறுவதாகவே சூழல் பாதுகாப்பு குறு நாடகம் அமைந்தது. இந்த நாடகத்தில் வரும் பாத்திரங்களின் உரையாடல்கள் மூலம் சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயங்கள் பற்றி கூறப்படுகிறது. நகரமயமாக்கல் என்ற போர்வையில் கிராமங்கள் அருகிச் செல்கின்றன. இதே போல் இடத்தேவையின் அதிகரிப்பு, மற்றும் பல காரணங்களுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுவதால் இயற்கைத் தாவர வளம் குறைவடைகிறது. தாவர வளம் குறைவடைவதால் மழை வீழ்ச்சியின் அளவு குறைவடைகிறது. மழை வீழ்ச்சி குறைவடைவதால் பூமியின் வெப்பம் அதிகரிக்கிறது. இதனால் சூழல் சமநிலை சீர்குலைக்கப்படுகிறது. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்குரிய அடிப்படை காரணங்களில் ஒன்று சூழல் சமநிலை மாற்றம்.

அடுத்து நமது அன்றாட செயற்பாடுகளை நோக்கும் போது நமது குப்பைகளால் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் பைகளை கண்ட இடங்களிலும் வீசுதல் கூடாது. அவை மண்ணில் உக்காத தன்மை கொண்டமையால் மண் வளத்திற்கு பாதிப்பு ஏற்படும். ஆகையால் மண்ணில் உக்காத தன்மை கொண்ட பொருட்களை சேர்த்து வைத்து குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபடும் நகர சபைத் தொழிலாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இதே போல் வீதிகளில் குப்பைகள் போடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். வீதியோரத்தில் காணப்படும் கழிவு கால் வாய்களில் குப்பைகள் போடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். கழிவு நீர் கால்வாய்களில் எறியப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் பைகள், ஏனைய குப்பைகளால் கால்வாய்கள் அடைபடும். இதனால் மழை நீர் வழிந்தோட வழியில்லாமல் வீதிகளில் தேங்கி நிற்கும். எனவே மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அதே வேளை கடற்கரை ஓரங்களில் மண் அகழ்வதனாலும், கடலுக்குள் காணப்படும் சுண்ணக்கற்களை அகழ்வதாலும் கடலரிப்பு ஏற்படுகின்றது. கடலரிப்பு அதிகரித்தால் காலப்போக்கில் நிலத்தின் அளவு குறைந்து கடலின் அளவு அதிகரிக்கும் நிலைமை ஏற்படும்.

இவ்வாறு மனிதனது செயற்பாடுகளால் மனிதனுக்கே அச்சுறுத்தல் ஏற்படுகிறது. சூழலைப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமையாகும். நாம் செய்யும் சிறிய விடயங்களால் இயற்கையாக ஏற்படக்கூடிய பாரிய விளைவுகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். சூழலைப் பாதுகாத்து இயற்கையைப் பாதுகாப்போம்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.